கணபதி துணை

# குழந்தை ஆயுஷ்ய ஹோமம் முன்தயாரிப்பு

(அனைத்து பக்கங்களையும் அச்சிடவும்–Print all pages)

**இந்த முன்னேற்பாடு விளக்க கையேடு ஆயுஷ்ய ஹோம நிகழ்ச்சிக்காக தரப்படுகிறது**

**புனித தன்மையுடன் தரமாக அமைய வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தில் திட்டமிடல், ஒருங்கிணைப்பது மற்றும் செயல்படுவது குறித்து இங்கு விரிவாக தரப்பட்டுள்ளது.**

**முழுஈடுபாட்டுடன் தங்களிள் ஒத்துழைப்புடன் நாம் கூடி இறையருளால் நிகழ்ச்சியை வெற்றியடைய செய்வோம்**



## புணிதப்படுத்துதல்

- ❑ பூஜை துவங்கும் நேரத்திற்கு 4 மணி நேரம் முன்னதாக இடத்தை சுத்தம் செய்யவும்
- ❑ தலை வாசற்படிக்கு மாவிலை தோரணம் கட்டி. மஞ்சள் குங்குமம் இடவும்
- ❑ வாசல்படி மாலை சாற்றவும்
- ❑ வாசல், உட்புறம், பூஜையறையில் 8 இதழ் தாமரை கோலம் போடவும்
- ❑ பூஜை செய்யும் இடம் ஈரம் இல்லாமல் இருக்க வேண்டும்
- ❑ தேவையான பொருட்கள்: மாயிலை கொத்து, சணல் கயிறு, சுத்தியல், கம்பி ஆணி 4, சணல் கோணி 5, மிதியடி 2

## கோ பூஜை

கோதுமை தவிடு 2 கிலோ, அரிசி 1 கைப்பிடி, வெல்லம்1/4 கிலோ, வாழைப்பழம் 6 ஆகியவற்றை முந்திய நாள் இரவு ஊறவைத்து பூஜை அன்று காலையில் பசுவிற்கு தானம் செய்யவும்

## பஞ்சகவ்யம்

- ❑ பசும் பால் : 50 மிலி
- ❑ பசும் தயிர் : 50 மிலி
- ❑ பசுஞ்சாணம் : அரை கைப்பிடி
- ❑ பசும் நெய் : விபரமாக தரப்பட்டுள்ளது
- ❑ பசும் கோமயம் : 25 மிலி
- ❑ பசும் விரட்டி : 3

## பூஜைப்பொருட்கள்

- ❑ பட்டியலில் உள்ள அனைத்து பொருட்களும் தேவை
- ❑ பட்டியலையும் வாங்கிய பொருட்களையும் ஒப்பிட்டு சரிபார்க்கவும்
- ❑ தேங்காய் அளவு கலசத்தின் வாய்க்கு ஏற்ப இருக்கவேண்டும்
- ❑ பூஜைப்பொருட்களை 2 மணி நேரம் முன்னதாக பூஜை இடத்தில் சேர்ப்பிக்கவும்
- ❑ தாம்பாளம் 5, குடத்தில் நீர், டம்பளார் 5, எவர்சில்வர் கப் 4
- ❑ சாணம் அல்லது மஞ்சள் பூசிய செங்கல் 9, மணல் 1 பாண்டு

## முக்கியமானவைகள்

- ❑ கத்தரிக்கோல், தேங்காய் உடைக்க கத்தி, ப்ளேடு, சமையல்கத்தி

## வினாயகருக்கு மிகவும் பிடித்தமானவை (ஹோமத்தில் அர்ப்பணம்)

- ❑ காய்ந்த தேங்காய் ஓடு (கொட்டாங்குச்சி), காய்ந்த தேங்காய் மட்டை
- ❑ கரும்பு துண்டு (பழச்சாறு கடையில் கிடைக்கும் )
- ❑ தானாக மரத்தில் இருந்து விழுந்த அரசன் சுள்ளி 11
- ❑ அருகன், தும்பை, சங்கு, அரளிப்பூக்கள்
- ❑ முயற்சி செய்யவும், கிடைக்கவில்லை எனில் இருப்பதை கொண்டு மனநிறைவுடன் செய்வோம்

## சுமங்கலி –தாம்பூலம் பை

- ❑ வருகைதரும் சுமங்கலிகளுக்கு மரியாதை தாம்பூலம்
- ❑ விருந்தினர் விடைபெறும் பொழுது அளிக்க தாம்பூலம் பை

## ஹோம நெய்

- ❑ 500 கிராம் வெண்ணெய் வாங்கி உருக்கி நெய் தயாரிக்கவும் அல்லது ஆவின் நெய் 250 கிராம் வாங்கவும்
- ❑ வேறு நெய்களை வாங்கவேண்டாம் (கடையில் விற்கும் நெய்யில் மாட்டுக்கொழுப்பு கலப்பு உள்ளது)

www.rohitha.com

## தீபம் ஒளிர் விடல்




- ❑ பூஜைகள் நிறைவு பெறும் வரை தீபம் மங்களகரமாக ஒளிர்விட வேண்டும், தேவையான அளவு நல்லெண்ணெய், கரண்டி
- ❑ இதற்கு ஒரு பெண் பொறுப்பு ஏற்க வேண்டும்

## கவனம் செலுத்துதல் / நல்ல நேரம்

- ❑ பூஜை துவங்கியவுடன் முழு ஈடுபாடுடன் பூஜை செய்ய ஏதுவாக நன்கு திட்டமிடவும்
- ❑ குறித்த நல்ல நேரத்தில் பூஜையை துவக்கி நிறைவு செய்ய நன்கு திட்டமிடவும்
- ❑ மிகவும் நெருங்கியவர்களை மட்டும் அழைக்கவும்
- ❑ அதிக எண்ணிக்கையில் அழைத்தால் அவர்களை உபசரிக்கவே அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது, இதனால் முழு ஈடுபாட்டுடன் பூஜை செய்வது கடினமாகும்

## ஹோம பிரசாதம்

அ) சர்க்கரைப்பொங்கல் 1 ஆழாக்கு — ஆ) மூக்கு கடலை சுண்டல் (தாளிப்பு இல்லாமல்) 1 ஆழாக்கு
இ) கொழுக்கட்டை 21 — ஈ) வெள்ளை எள் உருண்டை 21
தங்களின் வசதியை முன்னிட்டு இவை நான்கும் அல்லது ஏதேனும் ஒன்று மட்டும்

## இட தூய்மை

- ❑ பூஜை செய்யும் இடத்தில் ஈரம், எண்ணெய் துடைக்க பழைய துணி, கோணி தேவை
- ❑ குப்பை போட குப்பை கூடை அல்லது பிளாஸ்டிக் பை
- ❑ புதிய மிதியடி, பழைய செய்தித்தாள்

## அவசர கால தேவை

- ❑ மின் தடை ஏற்பட்டால் சமாளிக்க 2 அவசரகால மின்விளக்கு (Emergency Light)

## புகை

பூஜையின் பொழுது எதிர்பாராத விதமாக புகை அதிகமானால் குழந்தை மற்றும் மூச்சுதினரல் உள்ளவர்களின் உடல்நிலை, கருதி புகையை வெளியேற்ற மேஜை மின்விசிறி (Table Fan), நீட்சி இணைப்பான் (Extension Wire Box) மற்றும் கைவிசிறி தேவை

## சில்லரை காசுகள் (பூஜை துவங்கும் முன்னர் புரோகிதர் வசம் தரவும்)

- ❖ 5 ரூபாய் காசு : 9 (நவக்கிரக பூஜை)
- ❖ 50 காசு : 9 (திருஷ்டி பூசனி)
- ❖ 1 ரூபாய் காசு : 48 + 108 (லட்சுமி பூஜை மற்றும் அர்ச்சனை)

## புரோகிதர் விபரம்

- ❑ வருகை : குறிப்பிட்டபடி (+/– 15 நிமிடம் )
- ❑ உணவு : முன்னாள் இரவு தங்கும் சூழலில் புரோகிதர் உணவு எண்ணெய் இல்லாத சப்பாத்தி அல்லது ஆவியில் வேக வைத்த உணவு
- ❑ மசாலா பொருட்கள் கலப்பை உண்பதில்லை
- ❑ அனைத்து வீட்டிலும் புரோகிதர் உணவு உண்பார் ஆயினும் உணவுகட்டுப்பாடு காரணமாக மட்டுமே சில வேளைகளில் வெளியில் உணவு உண்பதில்லை .

## திருஷ்டி பரிகாரம்

- ❑ திருஷ்டி பரிகாரம் சுற்றி உடைக்க கட்டிடம் கட்டிய தொழிலாளி குளித்து திருநீறு பூசியவர் தேவை
- ❑ பாதசாரி, வாகன ஓட்டிகளின் பாதுகாப்பு முன்னிட்டு பூசணியை நடு சாலையில் உடைக்ககூடாது என்று வலியுறுத்தவும்

## பாதபூஜை

- ❑ தாய், தகப்பனார் இருவரும் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு பாதபூஜை செய்து பின்னர் மற்றவை துவக்குவது நன்று

## தண்ணீர்

- ❑ மின்தடையை முன்னிட்டு முன்னாள் இரவே மேல்நிலை தொட்டி மற்றும் உபரி தொட்டியில் நீர் நிரப்பவும்

www.prohithar.com

## மங்கள இசை

- ❑ டேப் ரிக்கார்டர், மங்கள இசை, தேவாரம், திவ்யபிரபந்தம் பக்திப்பாடல்கள் ஒலிவட்டு தேவை




## தர்மம்

ஆயுஷ்ய ஹோமம் அன்று ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள குழந்தைகள், முதியோர்களுக்கு ஒரு வேளை உணவிற்கு ஏற்பாடு செய்யலாம், நல்ல நிலையில் மீதம் உள்ள உணவுகளை குறித்த நேரத்தில் மேற்படி இல்லங்களுக்கு தரலாம்

### ஆதரவற்றோர் இல்ல தொலைபேசி எண்கள்

| | |
|---|---|
| ✱ குட்லைப் சென்டர் (மனவளர்ச்சி குன்றியோர்கள்) | : 2226 4151, 4152 |
| ✱ ஆதீஸ்வரர் இல்லம் (ஆதரவற்ற குழந்தைகள்) | : 2275 6492, 94444 85491 |
| ✱ அக்ஷயா முதியோர் இல்லம் | : 2276 1658, 98410 08325 |
| ✱ சரணாலயம் முதியோர் இல்லம் | : 944 44 94 657, 94448 08915 |
| ✱ உதவும் உள்ளங்கள் (பச்சிளம் குழந்தை& சிறார்) | : 2226 6186, 6544 6378 |
| ✱ பவுஷ்ய தீபம் (ஆதரவற்ற குழந்தைகள்) | : 2276 1889, 99413 52962, 94440 00889 |

**துணிகள்** (துணிகளை துணிக்கடையில் மட்டும் வாங்கவும்)

- ❑ பூஜையின் பொழுது "பாதுகாப்பை முன்னிட்டு" பாலியஸ்டர், நைலான் துணிகளை உடுத்த வேண்டாம்.
- ❑ பாரம்பரிய, கலாசார ஆடை உடுத்தவும்
- ❑ பூஜையில் பயண்படுத்தும் துணிகள் பருத்தியில் மட்டும் வாங்கவும், பாலியஸ்டர் கட்டாயம் தவிர்க்கவும்

*கைத்தறி கதர் துணி வாங்கி ஏழை நெசவாளியின் ஒரு நாள் உணவிற்கு வழி செய்வோம் – மகாத்மா காந்தி*

## சேவை தரம்

- ❑ மிக அதிக தரத்துடன் நிகழ்ச்சியினை படைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்
- ❑ புரோகிதரின் சேவையில் குறைகள் இருப்பின்அவசியம் தெரிவிக்கவும் இது மேண்மையடைய செம்மைபடுத்த உதவும்
- ❑ அனைத்து விதமான விமர்சனங்களும் வரவேற்கப்படுகிறது
- ❑ உதவி : புரோகிதருக்கு பொருட்களை எடுத்து தர நெருக்கமான உறவினர் ஒருவரை அருகில் இருக்க சொல்லவும்

## புகைப்படம்

- ❑ பசுமையான நினைவுகள் நல்ல முறையில் பதிவு செய்ய தொழில் முறை புகைப்பட கலைஞரை ஏற்பாடு செய்வது நல்லது
- ❑ வீட்டில் உள்ளவர்களே படம் எடுப்பது முழுமையாகவும், தரமாகவும் அமைவதில்லை

www.prohithar.com

## குறிப்புகள்

- ❑ பூஜை பொருட்களில் துணியை துணிக்கடையிலும், அரிசியை அரிசிகடையில் மட்டும் வாங்கவும்
- ❑ புத்துணர்ச்சிக்காக அதிகாலையில் காபி அல்லது டீ ஏற்பாடு
- ❑ கடைசி நேரத்தில் கிடைக்காத பொருட்களுக்காக அலைச்சல் படாமல் இருப்பதை கொண்டு மனநிறைவுடன் செய்வோம்
- ❑ பழங்களை பிளாஷ்டிக் பையில் வைக்கவேண்டாம். திறந்த நிலையில் அல்லது குளிர் பதனியில் வைக்கவும்

## பெயர் – நட்சத்திரம்

தங்களின் குடும்பத்தினர் அனைவரது பெயர், நட்சத்திரம், ராசி, கோத்திரம் ஆகியவற்றை வயது மூப்பு அடிப்படையில் வரிசைப்படுத்தி எழுதி பூஜை துவங்கும் முன்னர் புரோகிதர் வசம் தரவும்

## ஹோம குண்டம் கலைத்தல்

பூஜை மறுநாள் அல்லது மூன்றாம் நாள் காலையில் சூரிய உதயத்திற்கு முன்னர் குளித்து, ஹோமகுண்டத்திற்கு தீபாராதனை காண்பித்து வடகிழக்கில் உள்ள செங்கல்லை முதலில் அப்புறப்படுத்தி பின்னர் மற்ற செங்கல்களையும் அப்புறப்படுத்தவும்

சாம்பலை தனியாக எடுக்கவும், பழையதுணியினை இரண்டாக மடித்து அதில் சாம்பலை கொட்டி மூட்டைக்கட்டி அதை ஒரு தட்டில் தட்டவும், தட்டில் விழும் நுண்ணிய சாம்பலை விபூதியாக பயண்படுத்தவும், மீதம் உள்ள சாம்பலை பூச்செடி அல்லது மரத்தின் அடியில் கொட்டவும், ஹோமத்தில் இட்ட சில்லரை காசுகளை பண அலமாரி , பூஜை அறையில் வைக்கவும்




### திருக்கோயில் வழிபாடு

ஆயுஷ்ய ஹோமம் அன்று மாலை வேளையில் சிவன் அல்லது பெருமாள் கோமிலுக்கு சென்று குழந்தை மற்றும் குடும்பத்தினர் பெயரில் அர்ச்சனை செய்து வழிபடவும்

தங்கள் பூர்வீக கிராமத்தில் உள்ள வசதியற்ற கோயிலுக்கு எண்ணெய் /ஒருமாத மின்கட்டணம் தந்து உதவிடுங்கள்

ஆகமவிதிப்படி குளத்துடன் கூடிய பழமையான கோயிலுக்கே முன்னுரிமை தரவும்

### புது துணி – மாலை

- புது துணி மணையில் அமர்ந்தவுடன் வாழ்த்தி தரப்படும் உடுத்தியவுடன் மாலை சாற்றிய பின்னர் பூஜை துவங்கும்
- குழந்தையின் தாய்மாமன்தான் முதல் மரியாதை துணி தரவேண்டும்

### வேண்டுகோள்

பூஜை தொடர்பான தங்களின் ஐயங்களுக்கு முழு விளக்கம் தேவைப்படின் **மதியம் 1 மணிக்கு மேல்** தொலைபேசியில் அழைக்கவும், காலை வேளைகளில் பூஜையில் இருக்கும் பொழுது தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் அளிக்க முடியாத சூழல் என்பதை பணிவுடன் தெருவித்துக்கொள்கிறேன்.

---

**“ தங்களின் நலன் கருதி பூஜைக்கு தேவையான பொருட்கள் மற்றும் கூடுதலாக நினைவு படுத்தும் வகையில் நிகழ்ச்சிக்கு தேவைப்படும் இதர பொருட்களும் பட்டியலில் தரப்பட்டுள்ளது ”**

---

மணையில் அமரும் குழந்தையின் பெற்றோருக்கு தாய், தந்தை இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு பாதபூஜை செய்த பின்னர் ஆயுஷ்ஹோமத்தை துவக்க வேண்டும்

**மாலையில் – முதல் வருட கொண்டாட்டம்**

முதலில் தீபம் ஏற்றவும் பின்னர் தங்களுக்கு விருப்பமான வடிவில் கொண்டாடவும்
முடிவில் வருகை தரும் பெரியவர்கள் குழந்தையை அட்சதையால் ஆசிர்வதிக்க வேண்டும்

மாலையில் அண்டைவீட்டார் குழந்தைகளுடன் முதல்வருடத்தை கொண்டாட தேவையானவை

| | | |
|---|---|---|
| பலூன் | கேக் | ஐஸ்கீரீம் |
| குளிர்பாணம் | இனிப்பு மற்றும் சாக்லேட் | |
| வண்ண காகிதம் | அலங்கார பொருட்கள்( decorative items) | |
| காகித மழை வெடி, | காகித தட்டு (ஐஸ்கீரீம் விநியோகிக்க) | |
| மெழுகுவத்திகள் | தூய்மை தாள் (டிஷ்யூ பேப்பர்) | |

வருகைதரும் குழந்தைகளுக்கு அன்பளிப்பு பொருட்கள்
காகித கூம்பு (தலையில் வைக்கும் வண்ண கூம்பு)

---



www.prohithar.com

**பாலு. சரவணசர்மா**
தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர்–ஜோதிடர்
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர்,
தாம்பரம் மேற்கு, சென்னை 600 045

ௐ

தொலைபேசி / நகலி : 2226 1742
கைத்தொலைபேசி : 98403 69677
மின்அஞ்சல் முகவரி: prohithar@gmail.com
இணைய தளம்: www.prohithar.com

# ஆயுஷ்ய ஹோம பொருள் பட்டியல்

## பூஜைப்பொருட்கள்

| | |
|---|---|
| தரமான மஞ்சள் தூள் | 100gm |
| தரமான குங்குமம் | 25gm |
| மஞ்சள்கொம்பு | 25gm |
| குண்டு மஞ்சள் | 25gm |
| விபூதி சிறிய | Pkt 1 |
| ~~நாம சூர்னம்~~ | |
| பன்னீர் புட்டி | 50 ml |
| சந்தனம் | 10gm |
| நவதான்யம் கலப்பு | 100gm |
| நவதான்யம் தலா | 25gm |
| கற்பூரம் | 25gm |
| ஊதுபத்தி | 1Pkt |
| தரமான சாம்பிரானி | 20gm |
| நெல் பொரி | 1Pkt |
| ஓமத்திரவியம் | Spl |
| உமி பாக்கெட் | 1 |
| மெழுகுவத்தி | 2 |
| திரிநூல் | 1கட்டு |
| தேன் புட்டி | 20gm |
| நூல்கண்டு | 1 |
| பூநூல் | 2 |
| வெற்றிலை | 50 |
| பாக்கு | 50gm |
| சுண்ணாம்பு | சிறியது |
| தீப்பெட்டி | 2 |
| தர்பை புல் | |
| வெல்லம் | 50gm |
| டைமன்ட் கற்கண்டு | 50gm |
| பேரிச்சம் பழம் | 200gm |
| கொட்டைபாக்கு | 9 |
| பாக்கு தொன்னை | 1 டஜன் |
| ப்ளேடு | 1 |
| அவல், பொரி, கடலை | 50gm |
| நாட்டு சர்க்கரை | 50gm |
| கொப்பரை | 1 |
| தரமான முந்திரி | 50gm |
| தரமான திராட்சை | 50gm |
| தீர்த்த செட் | |
| கருங்காலி கட்டை | |
| அரசன் சுள்ளி | 3 கட்டு |

## பஞ்சகவ்யம்

| | |
|---|---|
| பசும் பால் | 50 மிலி |
| பசும் தயிர் | 50 மிலி |
| பசும் கோமயம், பசுஞ்சாணம் | |
| பசும் விரட்டி | 3 |

## இதரப்பொருட்கள்

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1Kg |
| வாழை இலை | 9 |
| வாழை பழம் | 2 டஜன் |
| கல்யாண பூசனி | 1 |
| எலுமிச்சை பழம் | 12 |
| பழங்கள் 5 வகை | தலா 2 |

## வெண்ணெய் 500 கிராம்

| | |
|---|---|
| மட்டை தேங்காய் | 1 |
| உரித்த சிறிய தேங்காய் | 4 |
| பச்சரிசி | 3 Kg |
| புழுங்கல் அரிசி | 1 Kg |
| கோதுமை தவிடு | 2 Kg |
| வெல்லம் | ½ Kg |

## பூ வகையறா

| | |
|---|---|
| தம்பதி பூ மாலை | 2 |
| தலை வாசல் மாலை | 1 |
| பூச்சரம் | 15 முழம் |

உதிரிப்பூக்கள்
அருகன் புல், துளசி, மரிக்கொழுந்து, தவனம், வில்வம், தாமரை 4
மா இலை

## துணி கடை (பருத்தி)

| | |
|---|---|
| பிள்ளையார் துண்டு சிறியது | 1 |
| பெரிய காசி துண்டு | 2 |

**பருத்தி ரவிக்கை துணிகள்**

| | | |
|---|---|---|
| ✱ சிவப்பு, வெள்ளை | தலா | 2 |
| ✱ பச்சை, மஞ்சள் | தலா | 1 |
| ✱ நீலம், கருப்பு | தலா | 1 |
| ✱ பலநிறம் | | 1 |
| பட்டுதுணி 1அடி x 1அடி அளவு | | 1 |

| | |
|---|---|
| ஐந்து ருபாய் காசு | 9 |
| ஒரு ருபாய் காசு | 48 + 108 |
| 50 காசு | 9 |

இனிப்பு மிட்டாய் (சாக்லேட்)
பலூன்
தூய்மை தாள்(டிஷ்யு பேப்பர்)

**வேண்டுகோள்**
**வீட்டில் இல்லாத பொருட்களை மட்டும் வாங்கவும்**

## வீட்டிலிருந்து கொண்டு வரவேண்டியவை

**பொதுவாக தேவைப்படுபவை**

பித்தளை கலச சொம்பு
குத்து விளக்கு 2
காமாட்சி விளக்கு
எண்ணெய் புட்டி
தட்டு, மணி, தீபக்கலசம்
பஞ்சபாத்திரம், உத்திரனி
தாம்பாள தட்டு 5 சிறிய கப் 11
மர மணை 3,

மணை மேல் துணி
பழைய செய்தித்தாள்
பழைய துணி
கத்திரிக்கோல், ப்ளேடு
சமையல் கத்தி
தேங்காய் உடைக்க கத்தி
கோலமாவு, வண்ணக்கோலம்
அவசரகால மின்விளக்கு
ஒலிவட்டு, வட்டு இயக்கி
மேஜை மின்விசிறி

கைவிசிறி
செங்கல் 9 – மணல் 1 பாண்டு
குடிநீர், டம்ப்ளார்
ஜமக்காளம், பாய்
பழைய மண் அகல் 4

**சில்லரை காசுகள்**
**பூஜை பட்டியல் பொருட்கள்**

பன்னீர் சொம்பு, குங்கும சிமிழ்
சந்தன கிண்ணம்,

புகைப்பட கருவி
**மாவிலை கொத்து**

புதிய துணிகள்

குப்பை போட பை

**தட்சணை ரு. 1500**

www.prohithar.com